

# பெரியதும் சிறியதும்

## இளம் வாசகர்களுக்கான இயற்கைக் கதைகள்


ஆக்கம்: வித்யா

ராஜாராம் சர்மா

மொழிபெயர்ப்பு: சுரேந்தர் பூபாலன்

செம்மையாக்கம்: த. பரசுராமன்

உதவி: க.ச. அமுதா

சு. மகேஸ்வரி

இரா. நளினி

## பிற கதைகள்

மாறுபட்ட இறகுகளுடைய பறவைகள்

முட்டைகளின் மர்மம்

உரிமையானவர்களும் தகுதியானவர்களும்

ரகசிய சபதம்

“ஏய் நீங்கள் அதிஷ்டசாலிகள்” முசுக்கட்டை மரத்தில் கூடு கட்டியிருந்த ஒரு ஜோடி கொண்டைக் குருவிகளிடம் கத்தினேன்.

“எப்படி?” எனத் தாய்க் கொண்டைக் குருவி கேட்டது.

“உங்களின் முட்டைகள் குஞ்சு பொரிந்துவிட்டன. ஆனால், அவற்றினுடையவை இன்னும் பொரிக்கவில்லை.”

“யாருடையவை?”





“சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவியினுடையவை.”

“என்னவாயிற்று? அவை தங்களின் முட்டைகளை அடைகாக்காமல் விட்டுவிட்டனவா?”

“இல்லை. இல்லை.... அவை அவ்வாறு செய்யவில்லை.”

சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவியின் கூட்டை எவ்வாறு நான் கண்டுபிடித்தேன் என்பதைப் பற்றியும், அப்பறவை முட்டைகளை அடைகாத்ததை எப்படி நான் தொடர்ந்து உற்றுநோக்கினேன் என்பதைப் பற்றியும் தாய் கொண்டைக் குருவியிடம் கூறினேன்.

ஒரு பறவை காவல் காக்கும் சமயத்தில் மற்றது முட்டைகளை

அடைகாக்கும். தற்செயலாக நாயோ வேறு ஏதாவதோ கூட்டுக்கு அருகில் வந்தால், அடைகாக்கும் பறவை சத்தமில்லாமல் எழுந்து அவ்விடத்தை விட்டுச் சென்றுவிடும். அதனால் அங்கு வரும் விலங்கிற்கு அந்த இடத்தில் முட்டைகள் இருப்பதே தெரியாது. ஆனால், இரு பறவைகளும் எப்பொழுதும் முட்டையின் அருகிலேயே காணப்படும்.

“மேற்சொன்னபடி நிகழ்ந்தால், முட்டைகள் குஞ்சு பொரிக்கும்” என்று சொன்ன பறவை பசிக்கு இரை தேடச் சென்றது.

கொண்டைக் குருவி சிறிய ஆனால் அழகானக் கூட்டில் மூன்று முட்டைகளை இட்டிருந்தது. அக்கூடு அரைக்கோளத்தில் கிண்ணம் போன்று, தேர்ந்த குச்சிகளைக் கொண்டு





நேர்த்தியாகக் கட்டப்பட்டிருந்தது. அது உள்ளங்கையில் பொருந்தும் அளவிற்குச் சிறியதாக இருந்தது. ஆள்காட்டிக் குருவியின் முட்டைகளில் இருப்பது போன்றே இவற்றிலும் கொப்புளங்களும் புள்ளிகளும் இருந்தன.

மங்கலான இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்த முட்டைகளில் பழுப்பான சிவப்பு, ஊதா நிற அடையாளங்கள் இருந்தன. ஆனால், ஆள்காட்டிக் குருவிகளின் முட்டைகளைவிடச் சிறியதாக ஏறக்குறைய நீள்வட்ட வடிவத்தில் இருந்தன.


“உங்களுடைய முட்டைகள் பதினான்கு நாட்களில் குஞ்சு பொரிந்தன. ஆள்காட்டிக் குருவியின் முட்டைகள் பெரியவை. அளவில் பெரிய முட்டைகள் குஞ்சு பொரிக்க அதிக காலம் ஆகுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால், அம்முட்டைகள் இடப்பட்டு ஒரு மாதம் ஆகிறது. இதுவரையிலும் அவற்றை

நான் கண்காணித்து வருகிறேன்” என்று இரை தேடச் சென்ற பறவை திரும்பி வரும் வரையிலும் காத்திருந்து, தொடர்ந்தேன்.

“நீ கடைசியாக எப்பொழுது அந்த முட்டைகளைப் பார்த்தாய்?” என்று அப்பறவை என்னைக் கேட்டது.

“இரண்டு நாட்களுக்கு முன்பு. பிறகு, அவற்றை நான் கவனிக்கவில்லை.”

“இச்சமயத்தில் நீ அதை கவனிக்காமல் விட்டிருக்கக்கூடாது! ஓடிச்சென்று அவற்றைப் பார். பைனாகுலரை எடுத்துச் செல்ல மறக்காதே!” என அப்பறவை எனக்கு அறிவுரை கூறியது.
“சரி” என நான் அரை மனதுடன் சொன்னேன். மேலும்,





பைனாகுலர் எதற்கு என வியந்தேன்.


ஆள்காட்டிக் குருவியின் கூடு தரையில் இருக்கும்.

அவை இயற்கையாக உள்ள சிறிய பள்ளம் அல்லது அது போன்றதொரு பள்ளத்தை உருவாக்கி அதைச் சுற்றிலும் கற்கள், மண்ணாங்கட்டிகள், புற்கள், குச்சிகளை மனம்போனபோக்கில் அடுக்கும். அதில் நான்கு முட்டைகளை இடும். அவை பார்ப்பதற்குக் கற்கள் சுற்றி இருப்பது போலவே தெரியும். இந்த முட்டைகள் சூழ்நிலைக்கு ஏற்ற தோற்றம் பெற்றுள்ளதால் அவற்றை பைனாகுலரின் மூலமாகவோ வெறுங்கண்களாலோ பார்த்தால் அது முற்றிலும் தற்செயலானதாகத்தான் இருக்கும்.

“முட்டைகளைக் காணவில்லை! யாரேனும் அவற்றை எடுத்திருக்க வேண்டும் அல்லது சாப்பிட்டிருக்க வேண்டும்... சுவடேதுமில்லை... அங்கு ஒன்றுமேயில்லை!”அக்கூட்டின் அருகே சென்று பார்த்தபோது மூச்சுவிடாமல் கத்தினேன் நான்.

“ஏன் இந்தக் கூச்சல்?” என வாத்து போன்றிருந்த சிறிய பறவை என்னை நோக்கி வேகமாக நீந்தி வந்தவாறே எரிச்சலுடன் கேட்டது.

“முட்டைகளைக் காணோம்!” தயங்கிப் பதிலளித்தபின் தொடர்ந்தேன். “அம்முட்டைகள் எப்போதுமே குஞ்சு பொரிக்காது என்று நினைத்தேன். அவை இங்கேயே நீண்ட காலம் இருந்தன! ஆனால், இப்போது அவற்றைக் காணவில்லை!”





“அம்முட்டைகள் ஏன் குஞ்சு பொரிக்காது?” என்று அப்பறவை உரிமையுடன் கேட்டது.

“நான்... கொண்டைக்குருவியின் -” வாயைத் திறந்தபடியே பேச்சை நிறுத்தினேன்.

கடந்த காலங்களில் அப்பறவை மீது நான் அதிகக் கவனத்தைச் செலுத்தவில்லை. ஆனால் தற்போது அதீத அக்கறை செலுத்தி அக்கூட்டைப் பார்த்தபோது திகைத்துவிட்டேன்.

“உனக்கு பின்னால் இருப்பது யார்? உன்னுடைய குஞ்சா?”

ஆமாம். என்மீது சவாரி செய்ய இரண்டு குஞ்சுகள் இருக்கின்றன. இதோ ஒன்று, இன்று பொரிந்தது.”

“இன்றா!”

“நீ மறுபடியும் கத்துகிறாய்!” அப்பறவை கடிந்துகொண்டது.

“உன்னுடைய குஞ்சு... அதுவும் பிறந்து ஒரு நாள்தான் ஆகிறது. அதன் கண்கள் திறந்திருக்கின்றன. மேலும் இறகுகளும் இருக்கிறதே!”

பிறந்து ஒரு நாளே ஆன கொண்டைக் குருவியின் குஞ்சுகளைப் பற்றி அப்பறவையிடம் நான் கூறினேன். அக்குஞ்சுகளுக்கு இறக்கைகள் முளைக்கவில்லை. மேலும் அவை கண்களையும் திறக்கவில்லை; மாறாக வீங்கியது போன்று இருந்தன. அவை வாயை மட்டுமே திறந்து கொண்டிருந்தன.






“ì! உன் மனவருத்தம் என்ன என்பது புரிகிறது. எல்லாப் பறவையின் குஞ்சுகளும் கொண்டைக் குருவியினுடையதைப் போன்றே இருக்குமென்று நீ எதிர்பார்க்கக்கூடாது. ஆள்காட்டிக் குருவிக் குஞ்சுகள் பிறக்கும்போதே முதிர்ச்சி அடைந்திருக்கும். எங்களின் குஞ்சுகளும் ஏறக்குறைய அதே போலத்தான்” என்று அப்பறவை தன் இறகுகளின் அடியில் குஞ்சுகளைப் பாதுகாப்பாக அணைத்து நீந்திச்சென்றவாறே கூறியது.

அப்பறவை கூறியது எனக்குத் தெளிவாகவில்லை. வேறு வேலை இல்லாததால் அச்சிறு குடும்பம் நீந்திச் செல்வதை நான் உட்கார்ந்து கவனித்தேன். பைனாகுலர் மிகவும் உதவியது!

குஞ்சுகள் தாயின் முதுகில் இருந்து அடிக்கடி வழுக்கி விழுந்து,

பின் அதனுடன் நீந்திச் சென்றன. அவை எவ்வளவு வேகந்தான் நீந்தும்! தாய்ப் பறவைக்கு இரை கிடைத்தால், அது திரும்பி தன் குஞ்சுகளுக்கு ஊட்டும். சில நேரங்களில் தந்தைப் பறவை வந்தும் இரையை ஊட்டும். வளர்ந்த பறவைகள் அவற்றிற்கு வேண்டிய இரையை நீந்தியபடியே சுயமாகத் தேடிக்கொள்ளும். அவை பார்ப்பதற்குப் புதிதாகப் பொரிந்த குஞ்சுகள் போன்றிருந்தன. ஆனால் அவை பெரியதாக இருந்தன.

“இந்த வகைப் பறவைகள் எத்தனை! இப்பறவைகள் ஏரி முழுவதும் நிரம்பி இருந்தன. இவற்றின் பெயர் என்ன?” ஏரியின் இக்கரையிலிருந்து அக்கரைவரை நோட்டம் விட்டபடியே நான் எனக்குள்ளாகக் கூறிக்கொண்டேன்.
“ஆள்காட்டிக்குருவி!”







என்னால் கத்தாமல் இருக்க முடியவில்லை. ஏரியின் அக்கரையிலிருந்த புல் மேட்டின் மீது ìர் ஆள்காட்டிக்குருவி. அது அடைகாப்பது போலவே; பாதி திறக்கப்பட்ட அலகோடும் ஆழ்ந்த சுவாசத்தோடும் அமர்ந்திருந்தது. அது அக்கம்பக்கத்தைக் கூர்ந்து கவனித்தபடியே இருந்தது.

மற்றொரு கூடு! ஆகா! மற்றொரு கண்டுபிடிப்பு!


நான் மெய்சிலிர்த்துப்போனேன். ஆனால் நான் கண்டதை எண்ணி வியந்தேன். ஒரு சிறிய குஞ்சு ஆள்காட்டிக்குருவியின் அருகில் நடந்து சென்று நெருங்கிப்படுத்துக்கொண்டது. அது அப்பறவையின் குஞ்சா? நான் தொடர்ந்து கவனித்தேன். சிறிது நேரத்திற்குப் பின் தாய்க் குருவி எழுந்து நடந்து சென்றது. குஞ்சு அதன் பின்னாலே நம்பிக்கையுடன் நடந்துச் சென்றது.


என்னுள் பல கேள்விகள் எழுந்தன. சுற்றும் முற்றும் பார்த்த பின், நான் உரக்க அழைத்தேன், “ஏய்! உன் பெயர் என்ன? தயவு செய்து சிறிது நேரம் இங்கே வர முடியுமா?”

“முக்குளிப்பான். அதற்கென்ன இப்பொழுது?” என்ற அப்பறவை குஞ்சுகள் இல்லாமல் தனியாக நெருங்கி வந்து கேட்டது.

“அது முக்குளிப்பானின் குஞ்சுகளா?” என்று நான் மெதுவாகக் கேட்டேன்.

“ஆமா” என அப்பறவை மெதுவாகச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தது, “ஒன்று நேற்று பொரிந்தது. மற்ற முட்டைகள் அநேகமாக இன்று பொரிந்துவிடும். எப்பொழுதெல்லாம்





குஞ்சுகள் உலர்ந்து நிற்பதற்கு பலமுள்ளதாக உணர்கிறதோ அப்போதெல்லாம் தாய் முக்குளிப்பான் அவற்றைக் கூட்டைவிட்டு இரை கிடைக்கும் வேறோர் இடத்திற்குக் கூட்டிச் சென்று சுயமாக இரை தேட வைக்கும்.”
“ì! அப்புறம்... இந்தக் கூடு ஏன் காலியாக உள்ளது.”

“கூட்டிலிருந்த முட்டைகள் இரு நாட்களுக்கு முன்பு குஞ்சு பொரிந்தன. அங்கே பார், அக்குடும்பம் முழுவதும் அங்கே இருக்கிறது.”


முக்குளிப்பானைப் பின்தொடர்ந்து அதன் குஞ்சுகளைப் பார்க்கலாம் என நான் முயன்றேன், அப்பறவை உணர்ச்சிவசப்பட்டு என்னை அழைத்தது, “உன் பைனாகுலரைப் பயன்படுத்திப் பார்! தாய் ஆள்காட்டிக்குருவி தன் குஞ்சுகள் அனைத்தையும் அருகில் அணைத்து வைத்துக்

கொண்டிருக்கிறது.”

“ì... ì! பத்து கால்களுடைய ìர் ஆள்காட்டிக்குருவி! என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. நான் இதுநாள்வரை இதுபோல் பார்த்ததில்லை! தாய் ஆள்காட்டிக்குருவி பாதி உட்கார்ந்திருக்கிறது. அதன் மஞ்சள் வண்ணக் கால்களை என்னால் பார்க்க முடிகிறது. அதனுடன் நான்கு இணை சாம்பல் நிறக் கால்கள் நீட்டிக்கொண்டிருந்தன!

“அப்பறவை அதுபோல்தான் தன் குஞ்சுகளை மறைத்து வைத்திருக்குமா?” என நான் கேட்டேன்.

“இல்லை... அம்முறையில்தான் அவை குஞ்சுகளைக் கதகதப்பாக வைக்கும். ஆள்காட்டிக்குருவிகளின் குஞ்சுகளும் சூழலுக்கு ஏற்பத் தங்களை மறைத்துக் கொள்ளும் திறன்





உள்ளவை. தங்களின் பெற்றோரிடமிருந்து ìர் எச்சரிக்கை ஒலி வந்தால் போதும், அவை அப்படியே தரையில் அசைவற்று உட்கார்ந்து விடும். கவனமாகப் பார், இல்லையென்றால் அவற்றைத் தவறவிட்டுவிடுவாய்" என்று அப்பறவை நீந்திச் சென்றபடியே என்னை மறுபடியும் அழைத்துச் சொன்னது.


"நீ அதிஷ்டம் இல்லாதவள்," என்று நான் திரும்பி வந்து கொண்டைக்குருவியிடம் கூறினேன். "ஆள்காட்டிக்குருவிகள் தங்களின் குஞ்சுகளுக்கு இரை தேடும்போது, உங்களைப்போல் சோர்வடைவதில்லை."

"ஆ!" என்று அப்பறவை கர்வத்துடன் கூறியது. "நாங்கள் எங்களின் குஞ்சுகளை பதினான்கு நாட்களுக்குப் பாதுகாக்க வேண்டும். அதன்பின் அவை பறக்கும் திறன் பெற்றுத் தாமாக

வாழும். குஞ்சுகள் பறக்கக் கற்றுக் கொண்டபின்தான் பாதுகாப்பாக வாழும். ஆள்காட்டிக் குருவியின் குஞ்சுகள் பறக்க ஒரு மாத காலம் ஆகும். அதுவரையிலும் அவற்றின் தாய், தந்தைக் குருவிகள் தூக்கமில்லா இரவுகளையும் ஓய்வில்லா நாட்களையுமே கொண்டிருக்கும்; ஏனென்றால், அவை தமது குஞ்சுகளை வேட்டைப் பறவைகளிடமிருந்தும் விலங்குகளிடமிருந்தும் கவனமில்லாமல் மிதித்து நசுக்கும் மனிதர்களிடமிருந்தும் பாதுகாக்க வேண்டுமே!”

“ì! யார் அதிஷ்டசாலி என்று யாராலும் எப்பொழுதும் கூற முடியாது” எனக் கூறி மெதுவாகத் தலையாட்டியபடியே நான் பெருமூச்சு விட்டேன்.

“ஆள்காட்டிக் குருவியின் குஞ்சுகள் பிறக்கும்போதே நன்கு





வளர்ச்சி அடைந்திருக்கின்றன எனில், உன்னுடைய குஞ்சுகள் எவ்வகையின?" முக்குளிப்பான் சொன்னதை நான் நினைவுகூர்ந்து கேட்டேன்.

"உணவூட்டம் தேவைப்படுபவை" என்றது கொண்டைக்குருவி.

<u>பறவைக் குஞ்சுகளின் அறிமுகம்</u>

*இக்கதை கடந்த 2010 ஆம் ஆண்டில், ஏப்ரல் முதல் ஜூலை மாதங்கள் வரை, தெற்கு தில்லியின் எல்லையிலுள்ள சஞ்சய் வனம், அதைச் சுற்றியிருக்கும் குடியிருப்புப் பகுதியில், உற்றுநோக்கியதன் அடிப்படையில் உருவானது.*

*இப்புத்தகத்திலுள்ள புகைப்படங்கள் பறவைகள், கூடுகளின் உண்மையான அளவைக் குறிக்காது.*



கொண்டைக்குருவிக் குஞ்சுகள்; நாள் 1



கொண்டைக்குருவிக் குஞ்சுகள்; நாள் 6



கூட்டைவிட்டு வெளியேறத் தயாரான நிலையில்
கொண்டைக்குருவிக் குஞ்சுகள்; நாள் 11



முக்குளிப்பானின் குஞ்சுகள்



வளர்ந்த முக்குளிப்பானின் குஞ்சு



சிவப்பு மூக்கு ஆள்காட்டிக்குருவிக் குஞ்சு; நாள் 1



வளர்ந்த சிவப்பு மூக்கு ஆள்காட்டிக்குருவிக் குஞ்சு

பெரியதும் சிறியதும் published by VIDYA ONLINE is licensed under
a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported License
(http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/)
Permissions beyond the scope of this license may be
available at admin@vidyaonline.org

http://vidyaonline.net